1974 மார்ச் 15]

இது மானமதுரை ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கிறது என்பது நம்முடைய அமைச்சரவர்களுக்கு நன்கு தெரியும். இந்தப் பெரிய கண்மாயில் இன்னும் மராமத்து செய்யவில்லை என்ற பெருங்குறை அந்தப் பகுதியிலுள்ளவர்களுக்கு இருக்கிறது. இந்த அரசாங்கம் எத்தனையோ கண்மாய்களை வெட்டிக் கொடுத்து எவ்வளவோ உதவிகளைச் செய்திருக்கும்பொழுது இந்தக் கண்மாயைமட்டும் ஏனோ மறந்துவிட்டது. இனிமேலாவது இதை மராமத்து செய்து அல்லது ஆழப்படுத்தி அதிகத் தண்ணீரை தேக்கிக் கொள்வதற்குத் தீவிரத் திட்டத்தை ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, ஆழப்படுத்துவது என்பது வேறு. தூர் வாருவது வேறு. கண்மாயை வெட்டுவது என்பது வேறு. இந்த ஆண்டு மராமத்து செய்ய எடுத்துக்கொள்ளப் படும்.

தொட்டியம்-சீனிவாசநல்லூர் சாலை.

*443வினா :— திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) முசிறி வட்டம், தொட்டியத்திலிருந்து சித்தூர் வழியாக சீனிவாச நல்லூர் வரை செல்லும் சாலை மிகவும் பழுதடைந்திருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதை செப்பனிடுவதற்கான நடவடிக்கை ஏதேனும் எடுக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, பொதுப்பணித் துறையின் சார்பாக அந்தச் சாலையைச் செப்பனிடுவதற்கு ஒரு திட்டம் இருந்ததே, அது கைவிடப்பட்டதா ? அப்படியென்றால் இனிமேலாவது அதைச் சேர்க்க உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் முயற்சிப்பார்களா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே, முசிறி வட்டம் தொட்டியத்திலிருந்து சித்தூர் வழியாக சீனிவாசநல்லூர் வரை செல்லும் இந்தச் சாலை தொட்டியம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்தது. அவர்கள் நிதிநிலை பற்றாக்குறையாக இருப்பதால் செய்ய இயலவில்லை என்று சொன்னதால் மேற்படி சாலையை ஏறத்தாழ 5 இலட்சம் ரூபாயில் திட்டம் தயார் செய்யப்பட்டு, இந்த ஆண்டு சிறப்பு கிராமச் சாலை திட்டத்தின்கீழ் போட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்தச் சாலை என்னுடைய சொந்த ஊருக்குப் போகும் சாலை. அந்த ஊர் மக்கள் எம்.எல்.ஏ.யினுடைய சொந்த ஊருக்குப் போகும் சாலையே இப்படியிருந்தால் மற்றப் பகுதிகள் எப்படி இருக்கும் என்று கேலி செய்கிறார்கள். எனவே இதை அனுதாபத்தோடு கவனித்து விரைவில் நடவடிக்கை எடுக்க முயற்சிப்பார்களா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே, சில ஆண்டுக்காலமாக உறுப்பினரவர்கள் அந்த ஊரைச் சொந்த ஊராக ஆக்கிக்கொள்ளாமல் வேறு ஊரை எடுத்துக்கொண்டு விட்டாலும், அவர்கள் செல்லாவிட்டாலும் நான் சமீபத்தில் அதைப் பார்வையிட்டு அதைப் பழுது பார்க்க வேண்டுமென்று உத்தரவிட்டு வந்திருக்கிறேன்.

திரு. சீ. க. வடிவேலு : தலைவரவர்களே, 5 இலட்சம் ரூபாய் மதிப்பீடு என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். சென்ற ஆண்டே இந்தத் திட்டத்தை எடுப்பதாக இருந்தது. ஆனால் பண நெருக்கடி இருந்ததால், இந்த ஆண்டாவது அதைத் துரிதமாகச் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இந்த ஆண்டு எடுத்துக்கொள்வதற்குத்தான் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட்டேன்.

ஆலடியூரில் சாலை அமைப்பு.

*444 வினா :—திரு. ச. சங்குமுத்து தேவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அம்பாசமுத்திரம் தாலுகா, ஆலடியூர் பக்கம் தாம்பரபரணி நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலத்திற்கு அணுகுசாலை அமைப்பதற்கெனப் பொது மக்களிடமிருந்து நஞ்சை புஞ்சை நிலங்களை அரசு எடுத்துக்கொண்டதா ?

(இ) ஆம் எனில், மொத்தம் எத்தனை ஏக்கர் எடுத்துக்கொள்ளப்பட்டது ?

(உ) அதன் மொத்த மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) 6.04 ஏக்கர்.

(உ) ரூபாய் 48,496·01.